12.03.2026 OS.No.63/2013

சாட்சி: DW 4 லெட்சுமி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. இந்த வழக்கில் நான் பிரதிவாதி கிடையாது என்றால் சரிதான். நான் 9, 10, 12 பிரதிவாதிகளுக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அவர்கள் எனக்கு சாட்சியம் அளிக்க பவர் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவர்களுக்கு தெரிந்து தான் சாட்சியம் அளிக்க எனக்கு எழுத்துப்பூர்வ ஆதரவு கொடுத்துள்ளார்களா என்றால் இ ல்லை, அவர்களின் குடும்பத்தார் என்ற அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். தாவா வழக்கு என்ன என்ன சர்வே எண்களுக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் எண் மட்டும் தெரியாது. நான் 9,. 10, 12 பிரதிவாதிகளுக்கு எந்த வகையில் உறவினர் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். செஞ்சை நாட்டார்களுக்கு 2 முதல் 4 இலக்க சொத்துக்கள் பூர்வீக சொத்தா என்றால் இல்லை அது பொதுச் சொத்தாகும். ஒவ்வொறு குடும்பத்திற்கும் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் 44 புள்ளிகள் குடும்பத்திற்கு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

2. நான் 9, 10, 12 பிரதிவாதிகள் குடும்பத்தில் உள்ளளேனா என்றால் இல்லை நான் தனி வீடு ஆகும். 1ம் பிரதிவாதியின் தகப்பனார் மெய்யப்பன் அம்பலம் இறக்கும் காலத்தில் நான் பிறக்கவில்லை என்றால் நான் பிறக்கவில்லை. தாவா வழக்கில் 1வது இலக்க சொத்தை எப்படி கிரையம் வாங்கினார் என்றும் எந்த தேதியில் கிரையம் வாங்கினார்கள் என்றால் யாரிடமும் கிரையம் வாங்கவில்லை. தாவா சொத்து வாதி மெய்யப்பனுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அவருக்கு பங்கு உண்டு என்று சொன்னால் மெய்யப்பன் என்பவர் எந்த விசேசத்திலும் கலந்து கொள்ளால் நல்லது கெட்டதிலும் கலந்து கொள்ளாமல் சொத்து வேண்டாம் என்று கூறி சென்னைக்கு சென்று விட்டார். அவர்கள் குடும்பத்தில் தினமும் என்ன நடக்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், 4, 5 நாட்களுக்கு ஒரு முறை சென்று பார்ப்பேன். 1ம் பிரதிவாதி ராக்கப்பன் உயிருடன் இருக்கும் போது அவர் எனது ஐயா என்பதால் தினமும் பார்க்கப்போவேன். 1ம்

பிரதிவாதி உடல் நிலை சரியில்லாமல் இருக்கும் போது மேற்படியாரின் மூன்று மகன்களுக்கு 15 ஏக்கர் காட்டுச்சொத்தை 3 ஆண் மகன்களுக்கும் எழுதி வைக்கவேண்டும் என்றும் எழுதி வைத்துவிட்டதாக என்னிடம் கூறினார். எனக்கு சொத்து குறித்து எதுவும் தெரியாது என்றும் நான் 9, 10, 12 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல, நான் தான் அந்த 4 பிள்ளைகளுக்கும் திருமணம் செய்து வைத்து நல்லது கெட்டதை பார்த்து வைத்தேன்.

(பிரதிவாதி 3, 4, 5 முதல் 8 மற்றும் 11 தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை தரப்பினர்களும் ஆஜர் இல்லை, எனவே குறுக்கு விசாரணை இல்லை முடிக்கப்பட்டுவிட்டது.)

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.